**II வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**O.S.No. 480/2023**

04.11.2025 வா.சா.1 திரு.பெரியதிருவடி

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–

என்னிடம் காட்டப்படும் ஆவணம் புல எண் 520/3 க்கான வில்லங்க சான்று என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது மாமனார் மற்றும் பாலகுரு ஆகியோர் 1973 ல் கிரையம் பெற்ற பின்பு வருவாய்துறை ஆவணங்களில் 2021 ல் தான் பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். 48 வருடங்களாக வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்யப்படுவதற்கு காரணம் எதுவும் உண்டா என்றால் 2020 வரைக்கும் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்ததால் பெயர் மாற்றம் செய்யப்படவில்லை. எந்த நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்தது என்றால் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் இருந்தது. நான் தாக்கல் செய்த நீதிபேராணை மனுவை தான் வழக்கு நிலுவையில் இருந்ததாக கூறுகிறேன் என்றால் சரிதான். நீதிபேராணை மனுவில் 2010 ம் ஆண்டிலேயே தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. நீதிபேராணை மனுவில் எந்த வருடம் தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. வருவாய்துறை ஆவணங்களில் பெயரை மாற்ற முயற்சி செய்தால் அதன் கூட்டு உரிமையாளர்களின் பெயர் தெரிந்துவிடும் என்பதால் நான் மாற்ற முயற்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது வீரராகவபுரம் கிராமம் பட்டா எண்.219 ன் படி கிரையம் வாங்கியதாக காட்டும் வகையில் வருவாய் துறையினரை வரவழைத்து சாட்சியம் அளிக்க செய்ய முடியும் என்றால் முடியாது. 2 ம்பிரதிவாதி 1 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்காக தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதியின் உரிமையை நான் மறுக்கிறேன் என்றால் சரிதான். நான் மறுப்பதால் எனது உரிமையில் வில்லங்கம் இருப்பதாக அர்த்தம் என்றால் வில்லங்கம் செய்ததால் தான் அந்த உரிமையை ரத்து செய்ய கேட்டுள்ளேன். தாவா சொத்தில் உரிமையை உண்டாக்கும் விதமாகத்தான் இந்த வழக்கில் விளம்புகை பரிகாரம் கேட்காமல் வேறு விதமாக 2 ம் பிரதிவாதியின் உரிமையை மறுப்பது போல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மதிப்பு தற்பொழுது எவ்வளவு இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் மதிப்பு தற்போது கோடி ரூபாய்க்கு மேல் இருக்கும் என்றால் தெரியாது. தாவா சொத்தில் பட்டா மாற்றம் செய்ய சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை உத்தரவை காட்டித்தான் கேட்டேன் என்றால் சரிதான். பட்டா மாற்றம் செய்யும்போது வருவாய்துறை அதிகாரிகள் ஏதாவது விசாரணை செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. விசாரணை செய்யாமல் அதிகாரிகள்

துணையோடு இராமகிருஷ்ணனின் வாரிசுகள் பெயருக்கு பட்டா மாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. விளம்புகை பரிகாரம் கோரவேண்டுமென்றால் அதிகபட்சமான நீதிமன்றம் கட்டணம் செலுத்த வேண்டியது இருக்கும் என்பதால் மறைமுகமாக எனக்கு இருப்பதாக கூறும் உரிமையை நிலைநாட்டும் விதமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கூட்டுரியையாளராக பாலகுருவை சேர்க்காததால் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. பாலகுருவிற்கு தாவா சொத்தில் எந்தவித உரிமையும் கிடையாது. சர்வே எண் 520 ஆனது தனித்தனியாக உட்பிரிவு செய்து பட்டாவில் பெயர் மாற்றம் செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

Uploaded on
Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2025.11.06 16:52:19 +0530